## <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவொற்றியூர்</u>

## <u>OS.No. 42/2021</u>

இந்நீதிமன்றத்து எழுத்தர் திரு.விஸ்வநாதன், இளநிலை உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்கு மூலம் 1873 ஆம் ஆண்டு 10-வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2024 ஆண்டு பிப்ரவரி மாதம் 08-ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி - 08.02.2024**

**பெயர் - ராஜலட்சுமி**

**த/பெ - கோபி**

**சாட்சி - PW1**

**விசாரணை தொடங்கும் நேரம்- 11.40 A.M**

**<u>குறுக்கு விசாரணை-</u>**

1. நான் எதுவரை படித்துள்ளேன் என்றால் நான் பி.ஏ பட்டப்படிப்பு படித்துள்ளேன். இந்த வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் கழிவரை மற்றும் கேட்டினை பிரதிவாதிகள் மூடி எங்களை உபயோகப்படுத்தவிடாமல் செய்வதால் வழக்கு தாக்கல் செய்தேன். நான் தாக்கல் செய்த பிரமாணவாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும் அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் நான் கூறி தான் எனது வழக்கறிஞர் தயார் செய்தார் என்றால் ஆமாம் எனது தாத்தா பெயர் என்ன என்றால் துரைராஜ் ஆகும் அவர் எனது தாயாரின் தகப்பனார் ஆவார். துரைராஜ் எங்கு பிறந்து வளர்ந்தார் என்றால் பர்மாவில் பிறந்து வளந்தவர். பர்மாவில் இருந்து இங்கு வந்து வீடு வாங்கினார். எந்த வருடத்தில் மேற்படி துரைராஜ் இங்கு வந்தார் என்றால் எனக்கு தெரியாது. எனது தந்தையாரின் தகப்பனார் பெயர் என்ன என்றால் ஞாபகம் இல்லை. துரைராஜின் தகப்பனார் பெயர் என்ன என்றால் ரங்கசாமி. ரங்கசாமியின் மனைவி பெயர் என்ன என்றால் நாகம்மாள்.

2. நான் கூறுவது தவறு என்றும் எனது ரங்கசாமியின் மனைவி பெயர் காளியம்மாள் என்றால் சரியல்ல. எனது தாத்தா துரைராஜின் முதல் மனைவி பெயர் தான் காளியம்மாள் அதை தான் எனது தாயாருக்கு பெயராக வைத்தனர். மேற்படி விவரங்கள் குறித்து ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளளேனா என்றால் இல்லை அந்த காலத்தில் பிறப்பு சான்றிதல் போன்ற ஆவணங்கள் அவர்களிடம் இல்லை. எனது பிரமாண வாக்குமூலத்தில் ரங்கசாமி துரைராஜின் மாமனார் என்று நான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறெனில் துரைராஜின் தந்தையாரின் பெயர் ரங்கசாமி என்று நான் தெரிவித்தது தவறு என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்தில் வழக்கு சொத்து மேற்படி ரங்கசாமிக்கு சொந்தமானது என நான் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். அதற்கான ஆதாராம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யயதுள்ளேனா என்றால் இல்லை. ரங்கசாமி எங்கிருந்து வந்தார் என்றால் பர்மாவிலிருந்து வந்தார் எந்த வருடத்தில் வந்தார் என்றால் தெரியாது. வழக்கு சொதது ரங்கசாமிக்கு செர்நதமானது என வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. அது உண்மையாக இருந்திருந்தால் நான் ஆவணம் தாக்கல் செய்திருப்பேன் என்றும் பொய் என்பதால் தான் ஆவணம் தாக்கல் செய்ய இயலவில்லை என்றும் கூறினால் சரியல்ல.

3. நான் பிறந்தது எங்கு என்றால் அன்னை சிவகாமி நகர். நான் வழக்கு சொத்தில் தான் பிறந்தேன் என்றால் ஆமாம். எனக்கு எப்பொழுது திருமணம் நடந்தது என்றால் 2009ல். எனக்கு திருமணம் நடந்தபோது வழக்கு சொத்தில் வீடு இருந்ததா என்றால் காலியாக இருந்தது. எனது தாத்தா துரைராஜ் எப்பொழுது இறந்தார் என்றால் 2011 அல்லது 2012ம் வருடம் இறந்தார். அதுவரை நாங்கள் எங்கிருந்தோம் என்றால் மேற்படி தாத்தா துரைராஜ் உடன் தான் கதவு எண் 81/16ல் வசித்தோம். மேற்படி 81/16 என்ற கதவிலக்கம் கொண்ட சொத்து வழக்கு சொத்தில் ஒரு பகுதியா என்றால் ஆமாம். 2015 ல் வழக்கு சொத்தை நான் கட்டியதாக நான் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். நான் வழக்கு சொத்தை கட்டியதற்கு ஆவணங்கள் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் வீடு கட்டுவதற்கு வாங்கிய கல்,மண், ஓடு ஆகியவற்றிற்கான ரசீதுகள் தாக்கல் செய்துள்ளேன். நான் கூறுவது தவறு என்றும் அதுபோல் ஆவணங்கள் எதுவும் தாக்கல்

செய்யவில்லை என்றால் சரியல்ல. அதுபோல் உண்மையாக வீடு கட்டி இருந்தால் ஆவணங்கள் தாக்கல் செய்திருப்பேன் என்றும் பொய்யாக கூறுவதால் தான் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றும் கூறினால் சரியல்ல. 2009 ல் நான் செய்து கொண்ட திருமணம் குமடும்பத்தாரால் ஏற்பாடு செய்யப்பட்ட திருமணமா என்றால் இல்லை. திருமணம் முடிந்து எங்கு இருந்தேன் என்றால் கொருக்குபேட்டையில் அமைந்துள்ள எனது மாமியார் வீட்டில் இருந்தேன். 2009 லிருந்து எப்பொழுது எனது தாய் வீட்டிற்கு வந்தேன் என்றால் 6மாத காலத்தில் வந்துவிட்டேன். 2009ல் எனது தாய் வீட்டிற்கு நான் வரும்பொழுது எனது கணவருடன் வந்தேனா என்றால் இல்லை தனியாக தான் வந்தேன். அந்த நேரத்தில் எனது கணவருடன் எனக்கு பிரச்சனை ஏற்பட்டதால் நான் அவரை பிரிந்து நான் எனது தாயார் வீட்டிற்கு வந்தேன் என்றால் சரியல்ல. நான் எதற்காக தனியாக தாய் வீட்டிற்கு வந்தேன் என்றால் எனது தாய் தந்தையர் அழைத்ததன் பேரில் வந்தேன். எனது தந்தை என்னை அழைத்தாரா என்றால் இல்லை அவர் எனக்கு ஒன்றரை வயது இருக்கும்போது இறந்துவிட்டார். என்னை படிக்க வைத்து வளர்த்தது எனது தாயாரா என்றால் ஆமாம். எனது தாயாருடன் எனது தாத்தா மற்றும் பாட்டி என்னை வளர்த்தனர். எனது கணவர் வழக்கு சொத்திற்கு எப்பொழுது வந்தார் என்றால் 2015 ல் வீடு கட்டிய பிறகு வந்தார்.

**(மேலும் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்கு வேண்டுகோளுக்கு இணங்க ஒத்தி வைக்கப்படுகிறது .)**

**விசாரணை முடியும் நேரம் : 12.15 P.M**